தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: அ

திருவள்ளுவர் யாண்டு ௨௦௧௨
துன்மதி : கார்த்திகை
(1981 நவம்பர் – டிசம்பர்)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர் .
திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

தமிழ்ப் பொழில்

துணர் : ருரு உள்ளுறை மலர் : அ

பக்கம்

1. காஞ்சிப்பாட்டு 171
K. சோமசுந்தரம் B. A; B. L;
தஞ்சை.

2. ஒரு பறவைப் பார்வையில் ....
2. ஆய்வாளரின் தகுதிகள் 176
சி. கோ. தெய்வநாயகம் எம். ஏ; எம். ஃபில்;
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

3. கொடிறுடைக்கும் கூன்கை 183
வ. பாண்டியன்
ஆராய்ச்சி மாணவர், தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

4. எழுத்துச் சீர்திருத்தம்பற்றி
ஒரு விளக்கம் 189
பண்டித புலவர்
வை. தங்கமணி, எம். ஏ; எம். ஃபில்;
தமிழாசிரியர்,
பி. கே. என். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருரு | திருவள்ளுவர் யாண்டு உ0கஉ துன்மதி-கார்த்திகை 1981 நவம்பர்—டிசம்பர் | மலர் அ

தமிழ் வாழ்க

காஞ்சிப் பாட்டு*

K. சோமசுந்தரர் பி. ஏ., பி. எல்.,

[3]

காஞ்சிப் பாட்டினிலே, தென்னவன் பெயரியவனும் துன்னருந் துப்பினையுடையானும், தொன்முது கடவுட் பின்னர் மேயவனும், பொருப்பின் பொருநனும் என்றதினால் உரையாசிரியர் நச்சினார்க்கினியார் கீழ்க்கண்டவாறு வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டு பொருளுரைப்பாராயினர். அஃது இராவணன் தமிழ் நாட்டை ஆளாதவாறு (இராவணன் அவ்வாறு ஆளுதல் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய விளக்க உரையாலும் தெளியப்படும்) இசை வலியால் போக்கின அகத்தியருடன் பின்னர், தலைச்சங்கத்திருந்து, கவியரங்கேறிய பாண்டியர் தமிழாய்ந்த செவ்வியால், பாண்டியர், தண்ணார் தமிழளிக்கும் தென்னாடுடைய சிவனொப்ப இருந்த தன்மையுமாகும். இவ்வரலாற்றினைக் கைக்கொண்டு கருத்தாய், மருதனார் 'தொன்முது கடவுட் பின்னர் மேய' என்று கூறியுள்ளாரென நச்சினார்க்கினியரது உரைக் குறிப்பாகும். இக்கருத்திற்கிணங்க, பாண்டியன் நெடுஞ்செழியன், தென்னவன் எனும் பெயருக்குரிய சிறப்பும், போர் உழக்கும் திறனும் கொண்டு, கடவுளரது வழித்தோன்றலாய் வயங்கி, அகத்தி

---

*துணர் 55, மலர் 6, பக்கம் 141-இன் தொடர் கட்டுரை.

யரது பொருப்பிற்கும் வேந்தனாய் விளங்கிய தன்மையும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளதென தெளியப்படும். இங்கு கூறப்படும் தொன்முது கடவுளர் யாவரென்பது ஆய்தற்குரியது.

சற்றே கூர்ந்து சிந்திக்கின், 'தென்னவன் பெயரிய தொன்முது கடவுளென்பது,' அகத்தியரையோ அல்லது முழுமுதற் கடவுளாகிய இறைவனையோ குறிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் சான்றும் கிடைத்திலது. இது தென்னவனாகிய பாண்டியனைக் குறிக்குமென ஊகமுடன் உணரப்படலாகும். மற்றும் அகத்தியரும் இறைவனும் பாண்டிய குலத்தில் உதித்தவருமல்லர். 'தென்னவன் பெயரிய தொன்முது கடவுள்' எனும் இச் சொற்றொடர், தென்பாண்டிய மரபில் பிறப்புற்றுத் தோன்றிய இருடியாகிய தென்னவன் என்ற பெயரினைக் குறிக்கும். ஒன்றியிருந்து ஓர்ந்து நினைத்தால் இக்குறிப்புப் பொருள் நனி விளங்கும். அருளறம் பூண்டுள்ள மெய்த்தவத்து இருடிகளைக் கடவுளெனக் கருதப்படுவதும், கடவுளரது சார்பாளராகக் கொண்டாடப் படுவதும், சங்கத்துச் சான்றோர்கள் பல்லிடத்தும் குறித்துள்ளமையான் அறியப்படும். கடவுளை, அறவாழி, அருளாளி யெனவும் கூறுவதும் மரபு. அருளொளி வீசும் தவத் திருவுடைய இருடியரைக் கடவுளென சிலம்பு (11-5) செப்பும். கலித்தொகையும் (93: 12-14) மெய்ப்பிக்கும். எனவே, தென்னவன் என்பது ஈண்டு இராவணனையோ அல்லது கூற்றுவனை உதைத்த கடவுளாகிய இறைவனையோ குறிக்காதென்பது உய்த்துணர்தற்குரியது.

தவத்தான் மாட்சிமையுற்ற இருடிகள் நினைந்தது நினைந்தவாறு நிகழ்ந்ததும், சொற்றது சொற்றவண்ணம் நடைபெறுவதும், சிற்றுயிர்களும் உயிரில் பொருள்களும் இயல்பு திரிந்து இருடிகள் ஆணைவழி வயமாகி, தவமிக்குடைய அன்னவரது தெய்வ மணங் கமழ ஏவல் செய்து இயங்குவதாகும் உண்மை சிறப்பாகப் பெரும்பாணாற்றுப்படை, புறம் முதலிய பாக்களின் மூலம் தெருளற்பாலது. இதனான், தென்னவன் பெயரிய தொன்முது கடவுள், தண்பாண்டிய நாட்டு கடவுட் பாண்டியனாய் உலகாண்டு, 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவராய்' மாட்சிமையுற்றது அறியப்படும். இன்னவரே பின்னர் அறம் கற்பிக்க ஆலமரத்து நிழலை இடமாகக் கொண்ட 'ஆலமர் செல்வன்'; அறநூலருளிய 'மறைமுது முதல்வன்' (சிலம்பு); 'மறைமுது நூல் செல்வன்' (அகம்); போதியங் கடவுளாகிய புத்தரைப் போன்று, ஆல்கெழு கடவுளென வழங்கப்பட்டது கருத்திற் பதிக்கற்பாலதாகும்; மற்றும் அதன் மாட்சிமையினை

யும் தெளிதல் வேண்டும். இதனைக் குறித்து அறிஞர் உலகு மேலும் ஆய்ந்து முடிவு காணுதற்குரியது. இக் கடவுட் பாண்டியன். அந்தத்தை யணவுவாராக விளங்கி, தவச் சுடரொடு திரிதரும் இருடியாய், அரிய அறநூல்களைப் பெரிய கற்று, பாண்டிய மன்னர்களுக்குள் செந்தீ பேணியராய் மாண்பாகி நின்று இசை விளக்கித் திகழ்ந்ததினான், நோற்றலின் ஆற்றலால் அருணிலைக்கண் விளங்கிய மருதனார், நெடுஞ்செழியனை நோக்கி அறிவுறுத்துங்காலை,

''தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல'' [761-763]

''நீயும், பெரியகற்று இசை விளக்கி'' [767]

''மகிழ்ந்தினி துறைமதி பெரும!'' [781]

என மொழிந்து, செழியனை நல்வழிப்படுத்திய பெருமை, இன்றும் பிறங்கி, அவாது பெருமிதத்தை நன்று வெளியாக்குவதாகும். பாண்டிய நாட்டினை யாண்ட முன்னோர்கள், காவலனாகவும், பாவலனாகவும் விளங்கிய பெருமையினையும், தொன்று தொட்ட மரபினையும் பின்னோர்களால் மறக்கப்பட்டு மறைந்தொழியா வண்ணம், தெய்வ நலஞ்சான்ற மெய்யுணர்வினரான மருதனார், தனது பெருகு வளமதுரைக் காஞ்சிப் பாட்டினில் அவற்றைச் சிறப்பொடு ஆற்றொழுக்காகப் பாடும் இயல்பினைக் கொண்டா ரென்பது நன்கு புலனாகும்.

கொற்றமும் வெற்றமும் கொண்டு செற்றம் நீங்கிய பாண்டிய மரபில் அரசாண்ட முன்னையோர் தொகையுள் ஒருவராய் வைத்தெண்ணுதற்கு மேவிய சால்புடன் ஒப்பற்றவராயும், வல்லவராயும் பிறர்க்கு உவமிக்கப் படுவாரென்னும் பொருட்டு, காஞ்சிப் புலவராய மருதனார், 'பொருந' என விளித்து அவரது போர் விருப்பினையும், வீரச்சிறப்பினையும், ஒருங்கு வைத்து ஒழுங்குபட நாவன்மையுடன் நிரலே பின்வருமாறு விவரிக்கலானார்.

'மலர்தலை உலகினை யாண்ட பாண்டிய உயர்குடியில் உதித்தவனே! சான்றோர் சால்புடையவனே! சீர்சான்ற நெல்லின் பெயரினைப் பெற்ற சாலியூரினை போரினிற் கைக்கொண்ட கொற்றவ! நலஞ்சான்ற முதுவெள்ளிலை எனும் ஊரை வென்று. அவ்வூரிலுள்ளார் அனைவரும் தொன்று மொழிந்து தொழில் கேட்கும் வகையில் அரசுபட அமருழக்கி முரசு கொண்டவனே! தலையாலங்கால மென்னுமிடத்து, தான் ஒருவனாக

நின்று தன்னை எதிர்த்த சேர சோழராய இருபெரு வேந்தரையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் எனும் குறுநில மன்னர் ஐவரையும் ஒருங்கே, கன்னிப் போரில் ஒரு தானாகி எதிர்த்து புறங்கண்டு எரி பரப்பி, அன்னவர் முரசும் குடையும் கைக்கொண்டு வெற்றிக் குறியாக, களவேள்வியும் புரிந்து, வாகை மிலைந்து செல்லும் போரினும் சிறந்து விளங்கும் குரிசிலே! தென் பரதவர் போரேறே! கொற்கையூர் வாழ்நர் விரும்பும் பொருந! நட்டவர் குடியுயர்த்தி செற்றவர் அரசு பெயர்த்த வலிமிக்க புகழ்வேந்தே!

''தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலா வெல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப
வெற்ற மொடு வெறுத் தொழுகிய
கொற்ற வர்தம் கோ னாகும்''

தன்மை வாய்ந்துள்ளாய்! உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும், பொய்யினை அறவே கடிந்து வாய்மையினை விரும்பி மெய்யுடனே நட்புச் செய்தலை உடையாய்! உலகமொடு உம்பர் நாட்டு விழுமியோரும் பகை கொண்டு திரண்டு வரினும், அன்னவர்க்கு அஞ்சி பணிந்தொழுகாத பான்மையனே! வாணன் எனும் சூரன் தென்திசை மலைக்கண் வைத்த விழுநிதி பெற நேரினும் பிறர் கூறும் பழி நமக்கு வருவதாக வென்று கருதாய்! சீரிய பொருளை, அழகிய செயலாகிய ஈதல் உள்ளத்துடன் கொடுக்கும் வள்ளன்மையோடு இசையுமுடையாய்!

நின்வென்றியா லுண்டாய கொற்றம் நின்வழித் தோன்றுவார்க்கு தொழப்படும் பிறைத் திங்கள் நாடோறும் வளர்ந்து சிறக்குமாறு போல வழிவழி உளதாய் மிகுவதாக! நின் பகைவர்து ஆக்கம், நிறையிருளைத் தரும் மதி நாளும் தேயுமாறு போல் நாடோறும் தேய்ந்தொழிந்து கெடுவதாக! சேட்புல மெங்கணும் பரந்து சென்று விளங்கும் நின் சீரிய புகழ் ஒருகாலும் கெடாது என்றும் நின்று நிலை பெறுவதாக!

''மலை நாறிய வியன் ஞாலத்து [4]
... ...
மழைதொழி லுதவ மாதிரங் கொழுக்கத்
தொடுப்பி னாயிரம் வித்தியது விளைய
நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
நோயி கந்து நோக்கு விளங்க [10-13]

... ...

உலக மாண்ட வுயர்ந்தோர் மருக! [23]

[நின் முன்னோர்கள் அறவழி பிழையாது ஒழுகினமையான் மழைத் தொழில் வற்றாமல் உதவியது. பரந்த திசைக ளெல்லாம் தழைத்தன. வித்திய விதையில் ஆயிரமாக விளைய வயல்களும் மரங்களும் பெரும் பயனளித்தன. அதனான் மக்க ளும் பசியும் பிணியும் நீங்கினர்.]

நீ ஆளும் வளங்கெழுமிய நன்னாடோ, புலவர் பாடும் புகழுடைத்து, வேற்று புலத்திலிருந்து கொண்டு குவிக்கப்பட்ட சிறந்த பொருள்களை நின்னாட்டில் வாழும் குடிமக்களுக்கு அளித்துப் புரத்தல் வேண்டு மாதலின் நற்பொருணூல்களைக் கசடறக் கற்று, கற்ற அறிவின் தெளிவால் இறை இயல் உணர்ந்து மேலும் நின்புகழை எங்கணும் விளங்கி நிலவிச் செய் வாயாக! அறந் தலைச்சிறந்து நிற்கும் நல்லமைச்சர்கள் நடுவே, பொலிவுகூர் சுற்றத்தொடு பொலிந்து, நாண்மீன்கள் நெறிப்படி நிற்கவும், ஞாயிறும் திங்களும் வரம்பு கடவாது விளங்கவும், அன்பும் அறனும் நீங்காது நன்னெறியிற் பிறழாத வராய், இனிதே இசை வேட்கையுடையராய் வாழ்வாயாக! நின்னொடு முன்னிலை எவன்!

இவ்வாறு போரின்பத்தையே பேரின்பமாகக் கொண்ட வீர வேந்த னுக்கு நிலையுடைத்தன்னாய் நிற்கும் உலக இன்பத்தின் வகை களினால் ஏற்படும் உவர்ப்பின் வழி உண்மையாய பேரின்ப விழைவு மாறாது உறுதிப்பாட்டுடன் நிகழ வேண்டுமென்ற நல் லெண்ணத்துடன், மாங்குடி மருதனார் அறவுரைகள் பொதுளிய பொருளுரைகளைப் பக்குவமாகக் கனிந்த வாழைப்பழத்தின்கண் ஊசி செலுத்துவது போன்று, காலம் கருதியும், செவ்வி தேர்ந் தும், குறிப்பு உணர்ந்தும் மொழிய முற்படுவாராயினர். நிலை யாமை பற்றிய மாணெறியினை, அறஆழித் திருமறை நெறி யாளராய மருதனார், முதற்கண் தம் கருத்தை வெளிப்படுத்தாது நல்லமயம் தேர்ந்து மன்னனது உள்ளம் நோகாது மகிழும் வண் ணம், அவரது மெய்ம்மை தழுவிய நட்பு, வள்ளன்மை, கருணை, இசை எத்திசையும் பரவக் கொள்ளும் தன்மை, ஆட்சியில் ஆண்மை முதலாய சீரிய குணத்து நல்லியல்புகளை யும், அன்னாரது படைத்திறனையும் கொடைத்திறனையும் ஏத்தும் முறையில், அருள்மனப் பான்மையால் புலப்படுத்தி, அதன்மூலம் வியப்பும் உவப்பும் கொண்ட மன்னனை தம் வயப் படுத்தினார். பின்னர் மன்னர், தலைநகராகக் கொண்டு நலனுடனாளும் மதுரை மூதூரின் சீரும் சிறப்பையும், அதன்

ஒரு பறவைப் பார்வையில் ... ...

2. ஆய்வாளரின் தகுதிகள்

—சி. கோ. தெய்வநாயகம்

ஏதனையும் ஏன்? எப்படி? எதற்கு எனும் தடைகளை எழுப்பி, சிந்தித்து பல்லாற்றானும் ஒப்பமுடியும் விடைகாண முயல்பவனே ஆய்வாளனாவான். பிறராற் குற்றஞ் சொல்லப்படாததாக ஆய்வினை மேற்கொள்ளும் தகவுடைமையே தகுதியுமாகும். கருத்துப் பொருளாயும், காட்சிப் பொருளாயும் அவன் ஆய முற்படுகின்ற பொருட்களின் தன்மைகள் பல திறத்தன. ஆதலின் அவை பற்றிய ஆய்வினை மேற்கொள்ளற்கு அவன் பல தகுதிகளைப் பெற்றிருப்பது அவசியமாகிறது. ஏனெனில் Dr. S P. Appasamy குறிப்பிடுவதுபோல உலகின் முன்னோடியாக—வழிகாட்டியாக அவன் விளங்குகின்றான். "The researcher is a pioneer in the original sense of the word"

நானிலங்களின் பெருவளனும் புலப்படுமாறு, இறை நிலையையும் பாராட்டி விரித்துரைத்த மருதனாரின் திறம் அறிந்து இன்புறற்குரியது. நிலையாமை பற்றிய உணர்வின் அடிப்படையில், உலகியல்பினையும் உள்ளவாறு செம்மையுற உணர்ந்து, வாழ்வினில் மகிழும் முறைமையால் இன்பமுற கழிக்க வேண்டுமென்பது, நலஞ்சான்ற காஞ்சியின் விழுப்பத்தினை உரைக்கும் மருதனாரின் உயர்ந்த நோக்கமாகும். மற்றும்,

"பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
விலங்கிழை மகளிர் பொலங்கலந் தேத்திய
மணங்கமழ் தேறன் மடுப்ப நாளு
மகிழ்ந்தினி துறைமதி பெரும!
வரைந்து நீபெற்ற நல்லூழி யையே [778—782]

என மருதனார் எடுத்தியம்புவதி லிருந்து, அவர் கூறும் காஞ்சித்திணை, நிலையாமையினை மட்டும் கூறி வரட்டுத் துறவினைப் புகட்டும் பான்மையுடையதல்ல என்பது உற்றுணரற்பாற்று.

(தொடரும்)

1. கல்வி கேள்விகளில் நிரம்பிய அறிவு பெற்றவனாக ஆய்வன் இருப்பது ''வரன்முறை ஆராய்ச்சிக்கு முதற் கண் வேண்டப்படுவதாகும். அஃதில்லாக்கால் ''அரங்கின்றி வட்டாடுவது மட்டுமல்ல'' ஆட்டம் தெரியாது ஆடுதல் ஒத்து அவனது ஆய்வு இகழப்படும்.

2. ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு.'' எனும் குறள்தான் தமிழாய்வின் இலக்கணம்.

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருளைக் காணும்'' பெற்றியும் ஆய்வனுக்குத் தேவை.

''இவர் மிகச் சிறந்த அறிஞர் எனவே இவர் கூறும் இக் கருத்தே சிறந்தது சரியானது; இப்பொருள் மிகச் சிறந்தது ஆதலின் இதுவே நன்று'' என ''கண்டதுங் கட்டும் முடிபு'' ஆய்வனுக்குக் கூடாது.

3. ''பெரியோரை வியத்தலு மிலமே சிறியோரை இகழ் தல் அதனினுமிலமே'' எனுங் கோள் கொண்டு எல் லாப் பொருட்களையும், அல்லது கருத்துக்களையும் ஆராய்ச்சிக் குட்பட்ட—அறிவுக்குடன்பட்ட நிலையில் கண்டு காட்டுவதே ஆய்வனுக்கு முறையாகும். இதனை ஆய்வியல் அறிமுக ஆசிரியர்கள்

> ''தம்மில் சிறிய பதவியுடையாரிடம் ஆய்வுத் திறன் வெளிப்பட்டாலும் போற்றல் வேண் டும் (அன்றி) அதனை எடுத்துரைத்தவன் நம்மினும் சிறப்புற்று விடுவானோ என எண்ணிப் பாராட்ட மறப்பதும் மறைப்பதும் தவறு. ஆய்வு நாட்டம் சிறிதுமிலாதானை அவனது பட்டம் பதவி கருதி வானளாவப் புகழ்வது அதனினும் தவறு''

எனக் குறித்துச் செல்வர்.

4. ஆய்வன் ஆய்பொருளின் மீது பற்றுதலோ அன்றி முரண்முனைப்போ கொள்ளுதல் தகாது.

''காய்தல் உவத்தல் அகற்றி'' அப்பொருளின் மெய்ம்மையினைக் கண்டிட, அவன் சமன் செய்து சீர் தூக்கும் கோல்போலும் ''ஆய்வு நேர்மை

யினைத்தான் அறிஞர் எம். எச். கோபால் 'Detachment' எனக் குறிப்பிடுவார்.

5. ஒருவன் பற்றின் மிகுதியாலோ, அன்றி வெறுப்பாலோ சான்றிலாத கருத்துக்களை நம்பிடலாம். ஆனால் அத்தகு 'கண்மூடி நம்பிக்கைகள்' (credulity) ஆய்வனுக்கு ஒல்லாது. இன்னோரன்ன குறைகளை அறிஞர் ''மகிழ்வுதரு போலி நியாயம்'' (Affective fallacy) என W. K. விம்சாசு போன்ற அறிஞர்கள் கூறுவர்.

''இக்குறையினைப் போக்கிட அவன், எதனையும் வினாவுக்குட்படுத்திச் சிந்திக்கும் ஆற்றலைப் பெருக்கிடல் வேண்டும். இக்கருத்தினை

''An Introduction to the Research Procedure in Social Sciences'' எனும் நூலில்

''Personal prejudices emanate from life long habits of thoughts. They may arise from temporamental weakness such as credulity The remedy for this is to adopt a questioning attitude at all times.''

என விளக்கப்படும். ஆனால் 'undue scepticism' எனும் தீராத ஐயுறவுக் கொள்கை குழப்பத்தையே தருமாதலின் வினாவுக்குட்படுத்திக் காண்டலும் ஒரு வரன்முறைக்குட்பட்டதாய் இருத்தலே நல்லது.

6. இனி 'Best' எனும் அறிஞர் ஆய்வாளன் என்பான் காரணார்த்தமான, தெளிவான சிந்தனையினைக் கொண்டவனே யாவான்'' என்பார்.

ஆய்பொருளை மட்டுமல்ல அதுபற்றிய ஆய்விற்குதவும் வேற்றுப்புல அறிவுகளிலும் (கல்வி, கேள்வி) தெளிவிருந்தால்தான் தெளிந்த ஒரு முடிபிற்கு வர இயலும். இன்றேல் அவனும் குழம்பி. ஏனையோரையும் குழப்பி விடும் சூழல் அமைந்து விடும்.

''நுனிப்புல் மேய்வு'' ஆய்வில் கூடாது. ஆய்வில் விரைவு என்பதும் ''அரைவேக்காட்டு ஆய்வினையே உருவாக்கும். ஆய்பொருள் பற்றிய ஆழ்ந்த பார்வையுடன் (Deep sense) இருப்பது மிக இன்றியமையாதது.

George எனும் அறிஞர் குறித்துக்காட்டும் Faber எனும் விஞ்ஞானியின் "ஆய்வு நோக்கு" ஆய்வனால் உளங்கொளத் தக்கதாகும். இதனை அறிஞர் கைலாச பதியார் நுண்மை நோக்கம்-'close reading of the text'என்பர்.

8. "அங்கங்கே கலைகள் தேறும் அறிவன் போல்" அங் கங்கே ஆய்வு காணும் கண்கள் அல்லது கருத்து ஆய்வனுக்கு வேண்டும்.

9. ஆய்வுச் சோதனைகளை வலியுறுத்தி முடிபு காண வேண்டுமே யொழிய கருதுகோளை (Hypothesis) வலியுறுத்த வேண்டும் எனும் எண்ணத்தோடு 'சான்று கோடலும்' வலிந்தும் மெலிந்தும் கூறும் கூற்றுக் களும் ஆய்வனுக்காகா.

'The emphasis (should be) on testing rather than prooving the Hypothesis' எனும் அறிஞர் "Best"ன் தொடர்கள் இக்கருத்தினை வலியுறுத்து கின்றன.

10. மேலும் இவ்வறிஞர் ஆய்வனுக்கு வேண்டிய தகுதிக ளாக பேரறிவாண்மை, உயர் கற்பனைத் திறம், இடுக்கண் கருதாது கருமமே கண்ணாதல் எனும் மூன்று தகுதிகளை,

"The research worker must be a scholary. Imaginative person of the highest integrity willing to spend long hours pairstakingly seeking truth"

என வலியுறுத்துகின்றார்.

11. ஆயின் அறிஞர் கோபால்,

"Detachment, continuity. and accuracy have been rightly claimed to be the three marks of a research "(scholar)"

என நடுநிலைமையும் தொடராய்வுச் சிந்தையும் நுனித்த சிந்தனைக் கூர்மையுமே ஆய்வனை, ஆய்வ னாகக் காட்டிடும் குறியீடுகள் என்றிடுவர்.

12. அடுத்து நினைவாற்றல் (Memory) ஆய்வனுக்கு வேண்டப்படும் தகுதியாகும். இன்றேல் அவனது ஆய்வு நிரல்பட அமையாது போவதுடன் பிறழ உணர்த்தும் குறைவினையும் பெற்றுவிடும்.

13. "யான், எனது எனும் தன் முனைப்புக்கள் ஆய்வனுக் காகா. எளிமை – அடக்கம் – தற்சார்பின்மை எனும் தகுதிகளே ஆய்வினையும், ஆய்வனையும் வளர்ப்பன என மொழிப.

14. ஆன்றவிந்து அடங்கிய கொள்கையாளனாக, விமரிசனங்களை வரவேற்று அவற்றிற்குத் தக்கவாறு விடையிறுத்து, பயனுடைச் சொற்களால், இனிய வுளவாக யாவர்க்கும் விளங்குமாறு எளிமையாக சுருக்கம்தான் அறிவின் ஆன்மா (Brevity is the soul of wi:d m) எனப் போற்றப்படுமாறு தன் ஆய்வுரையினை அமைத்திடல்தான் சீரியது.

முனைவர் இரமேசு மோகன்,

> "He must study his meterial. He needs infinite patience to cheek and recheek every detail. For this he must be precise, accurate and exat."

எனக் குறிப்பர்.

15. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் பிறர் கருத்துக் களின் சீரெல்லாந் தூக்கி, சிறுமை புறங்காத்து, யார்க்குந் தாழ்ச்சி சொலல் ஆய்வனுக்காகாது.

"புறக்கணிக்கப் பட்டாலும் உண்மைகளை உள்ளபடிக் காட்டிடும் அஞ்சாமையினைக் கொண்டிருத்தலே ஆய்வனுக்கு அழகு.

"He should have courage to follow his procedures leading to the conclutions that may be unpopular and bring him social disapproval.

16. "ஆய்வு நாகரிகம்" எனுந் தலைப்பில் ஆய்வியல் ஆசிரியர்,

> "பிறர் கருத்தை மேற்கோளாகச் சுட்டலாமே தவிர அதனைத் தமது கருத்துப்போல வெளி

யிடக் கூடாது. ஆய்வுத் துறையில் திருட்டு என்பது அறிவுத் திருட்டு. அறிவுத் திருட்டு பிற திருட்டுகளைவிடக் கொடியது; மிகுதி யான தண்டனைத் தரப்பட வேண்டியது.''

எனும் பகுதி சிந்தைக் கொள்ளத் தக்கது

17. ஆய்வியல் முனைப்பில் சிடுசிடுப்போ, சினமோ கூடாது. ஆய்வன் ஆராய்ச்சியினை விரும்பிச் செய் வானாக அமைதல் வேண்டும். ஏதோ கடமைக்காக ஆய்வினை மேற்கொள்வான் ஆய்வானாகான். பல் லாற் றனியப் பயனில சொல்வானேயாவான்.

18. ஆய்வு நிகழ்த்தும்போது காணும் புதிய உண்மைகள் ஆய்வனுக்கு முருகியல் இன்பத்தையும், மகிழ்வையும் தரத்தக்கதாகக் கருதப்படவே, ஆய்வனது ஆய்வுத் திட்டத்தினைப் பண்படுத்துவதாகும்.

19. ஆய்வன் தெரிந்திருக்க வேண்டியது பிறிதொன்று உண்டு! ''ஆய்வு ஒரு தொடரோட்டம் போன்றது.'' என்பதுதான் அது. ஏதோ தானே எல்லாவற்றையுங் கண்டுபிடித்து விட்டதாயும் அத்தோடு அது நிறைவு பெற்றுவிட்டதாயும் கருதுதல் கூடா. பின் தொடரும் ஆய்வர்க்குத் தகும் வகையில் தம் ஆய்வு மெய்மைகளை வெளியிடலே சிறந்தது; வரவேற்கத்தக்கது. இல்லை யேல் அவ்வாய்வு 'ஆய்வுப் பதடி' யாகிவிட நேரிடும்.

20. ஆய்வு என்பது ''The most benifit for the most people'' என்பதாகும். பெருவாரியான மக்கட்குப் பெருவாரியான நன்மைகள் புரியத்தக்கதாக உள்ள ஆய்வுகளை நிகழ்த்துதலே சிறந்தது.

''காலத்திற்கேற்ற வகைகள் காணல்தான் அறிவுடைமை இல்லையேல் ஆய்வு செல்லாக் காசாகி விடும். உலகத்தோடு ஒட்ட ஒழுகாத ஆய்வன் பலகற்றும் கல்லாதனாகவே காட்சி யளிக்கிறான்.

21. எல்லாஞ்சரி. ஆய்வு என்பதுபற்றியும், ஆய்வுரை என்பது பற்றியும், ஆய்வேடு பற்றியும் தெளிவிலாத கருத்தனாய் ஆய்வன் இருப்பின் அவனது கண்டு

பிடிப்புக்களால் மக்கட்குப் பயனிருக்குமா? கண்டு பிடிப்புக்களை தான் விளங்குமாறு வெளியிட இயலுமா? ''Best words; Best order'' எனும் ஆய்வுரை அமைப்பது பற்றித் தெரிந்து அனைவர்க்கும் புலனா மாறு தன் ஆய்வுக் கண்டுபிடிப்புக்களையும், அவற்றா னாய பயனையும் வெளியிடும் தேர்ச்சி பெற்ற ஆய்வனே போற்றவும், புகழவும் படுகிறான் ஆதலின் ''ஆய்வுரை'' அமைவு எனும் கலைமிக்கவனாய் ஆய்வ னமைவது வேண்டுதற்பாலதாகும்.

இவ்விதம் ஆய்வனது அடிப்படைத் தகுதிகள் அமை யினும், காலத்திற்கேற்பவும் ஆய்விற்கேற்பவும், ஆய் துறைக்கு ஏற்பவும், ஆய்பொருட்கேற்பவும் ஆய்வன் மேற்கொண்டொழுக வேண்டிய ஒழுகலாறுகள் தனித் தன்மை வாய்ந்து விரிகின்றன. எது சுருக்கமான, செம்மையான, நல்வழியோ அவ்வழி எண்ணித் துணிந்து படர்தலே ஆய்வனது அறிவு உடைமை ஆகும். ''An Introduction to the study of Literature'' எனும் நூலில் அறிஞர் அட்சன் இது குறித்து நிரம்பக் கூறுவார்.

22. **நூான் கொண்ட** கருத்து அறிஞருலகில் எத்தகைய நிலையில் கூறப்பட்டால் ஏற்கப்படும் என்பதனை தெரிந்திருத்தலும் ஆய்வர்க்குத் தேவை. அதற்கு அவன் பல கருத்தரங்குகளில் கலந்து பல கருத்துக் களை எடுத்துச் சொல்லி அவற்றிற்கு ஏனையவ ரிடம் எப்படி வரவேற்பு இருக்கிறது? எப்படி முரண் பாடுகள் எழுகின்றன? எப்படி அவற்றிற்கு நிறைவு செய்தல் எனும் முறைகளையும் அறிந்திருத்தல் இக் காலத்து இன்றியமையாது வேண்டப்படுவதாகும்,

கொடிறுடைக்கும் கூன்கை*

—வ. பாண்டியன்

[2]

நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டுள்ள குறளானது கயவர்களைப் பற்றிய நிகழ்ச்சியினைக் கூறுகின்றபடியால், மேற்கூறிய உரைவேறுபாடுகளில் கரந்துறையும் உண்மைப் பொருளினைக் கண்டறிவதற்கு, குறள் கூறும் கயவரின் உளநிலை (State of mind) யினைப் பற்றிய கருத்துக்களை முதலாவதாக இங்கு நோக்க வேண்டியுள்ளது.

திருக்குறளின் கருத்துப்படி கயவர் அச்சம் மிகுதியுடையவர்(குறள்: 1075); மிகுந்த துன்பத்திற்கு உள்ளாக்கப்படின் இணங்கிப் பணியும் இயல்பினர் என்பதாம் (குறள்: 1078). இவ்விரு கருத்துகளும். நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள குறள் கூறும் தாக்குதல் 'தன்மை' (nature of offence) யினை அறிய உதவுகின்றன எனலாம். இக்கருத்துகளோடு, நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள குறளின் கருத்தினை இணைத்துப் பார்க்கையில் அறிய வருவன:

அ) கொடுக்கப்படும் அடியினால் கயவன் இறக்கக்கூடாது. ஏனெனில், அவனிடமிருந்து பயனைப் பெற வேண்டியுள்ளது. (குறள்: 1077)

ஆ) கொடுக்கப்பெறும் அடியினால் மிகுந்த துன்பமும், அவ்வடியின் விளைவினைப் பற்றிய நினைவே அச்சம் உண்டாக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். (குறள்கள்: 1075, 1078)[11]

இனி, 'கொடிறு', 'கூன்கை' என்ற சொற்களுக்குரிய உண்மையான பொருள்களையும், தாக்குதல் வகைகளையும் (types of offence), அவைகளால் ஏற்படும் விளைவுகளையும் (Effects) காண்போம்.

கொடிறு:

வீர விளையாட்டுக் கலைகளில் முக்கியமான விதிமுறைகள் உள்ளன. அவற்றில் இரண்டு பின்வருவன:

---

*துணர் 55, மலர் 7, பக்கம் 170-இன் தொடர் கட்டுரை.

அ) தற்காப்பிற்காகத் தாக்குதல் செய்பவர், தாம் செய்யும் தாக்குதலினால் தமக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக் காத தாக்குதலையே மேற்கொள்ள வேண்டும்.

ஆ) எப்பயனை எதிர்பார்த்துத் தாக்குதல் செய்யப்படு கின்றதோ அப்பயனை அளிக்கக்கூடிய அளவிற்கே யுரிய தாக்குதலைச் செய்ய வேண்டும்.

இனி, இவ்விரு விதிமுறைகளை நினைவில் வைத்துக் 'கொடிறு' எனும் சொல்லினுக்குப் 'பல்' எனும் பொருள் கூறப்பட்டது. இது முதலாம் விதியின்படி காண்போமாயின், பொருத்தமற்ற பொரு ளாகும். ஏனெனில், பல்லின் மீது தாக்குதல் ஏற்படுத்தினால், தாக்குதல் செய்பவருக்கு ஊறு விளையுமாகலான், இவ்விதத் தாக்குதல் முறை வீர விளையாட்டுக் கலைகளில் தவிர்க்கப்படு கின்றது.

அடுத்து, 'கொடிறு' என்பதற்கு 'முகவாய்க்கட்டை' என்ற பொருள் கூறப்படுகிறது. முகவாய்க் கட்டையின் மீது ஏற்படுத் தப்படும் முறையான தாக்குதலானது, முகவாய்க் கட்டையில் காணப்படும் இடமான 'நாடிவர்மம்' என்னும் இடத்திலேயே செய்யப்படுகிறது இதனால், தாக்குதல் உற்றவர் நினைவை இழக்க நேரிடும் என்பது இந்திய[12] திபேத்திய[13] வீர விளை யாட்டுக் கலைகளின் முடிவாகும். இது நாம் கூறிய இரண்டாம் விதிமுறைக்கு மாறுபட்டு, பெற வேண்டிய பயனை அடைய முடியாமல் செய்கிறது. எனவே, 'முகவாய்க்கட்டை' எனும் பொருளும் பொருத்த மற்றதென அறிகிறோம்.

கடைசியாகக் 'கொடிறு' எனும் சொல்லிற்குக் 'கழுத்து' என்ற பொருள் கூறப்படுகின்றது. வீர விளையாட்டு வகைகளில் கழுத்தின் மீது தாக்குதல்கள் நடத்த வேண்டிய முறைகள் கற்றுத் தரப்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் பூட்டு (Lock), அடி (Strike), வெட்டு (Chop), குத்து (Punch) எனும் வகை களைச் சார்ந்தன. இவ்வாறான தாக்குதல்கள் அனைத்தி னாலும், கழுத்து உடைக்கப் படுமேயானால், தாக்கப்பட்டவர் இறக்க நேரிடும். எனவே, இந்தப் பொருளும், இரண்டாம் விதிக்கு மாறுபட்ட, குறள் கூறும் சொல்லிற்கு ஏற்ற பொரு ளாகத் தெரியவில்லை.

எனவே. 'கொடிறு' என்ற சொல்லுக்குக் 'கதுப்பு' என்ற பொருளே பொருத்த முடையதாகத் தெரிகின்றது.

கூன்கை:

'கூன்கை' என்ற சொல்லிற்கு வளைந்த கை, கொடுங்கை, கூர்ங்கை என்ற பொருள்கள் கூறப்பட்டுள்ளன. இனி இவற்றில் எது கூன்கை' என்ற சொல்லினைக் குறிக்கும் பொருளாக விருக்கலாம் என்பதனை ஆராய்வோம்.

குறளிலே காணப்படும், 'கூன்கையரல்லாதவர்க்கு' எனும் சொற்றொடர் எதிர்மறையாக, கூன்கையை உடையவர்க்கே என்று ஒரு சிறப்பியல்பினை உணர்த்துவதாக உள்ளது. எனவே, வீர விளையாட்டில் பயிற்சி பெற்று, ஒரு குறிப்பிட்ட கைநிலை (Hand form) யினைப் பயன்படுத்துதலையே 'கூன்கை' என்று கூறுவதாக வுள்ளது. எனவே, இச்சொல், ஒரு வீர விளை யாட்டுக் கலைச்சொல் (a technical term of martial art) என்பதனை அறிகின்றோம். இப்படிப்பட்ட அமைப்புடைய கூன் கையானது வலிவும், கூர்மையும் உடையதாக இருப்பதென்பது, பயிற்சி பெற்ற கையின் இயல்பான பண்புகளாகும். அதாவது, ஒரு கை முழுமையாகப் பயிற்சிப் பெறுவதானால் வலிமையுற்று, வலிமையான அல்லது கொடுமையான தாக்குதலைச் செய்யும் தன்மை பெறுவதனால், 'கொடுங்கை'யாகிறது.

இவ்வாறே, கையின் சுண்டுவிரல் — மணிக்கட்டு ஆகியவை களுக்கு இடைப்பட்ட பகுதியும், விரல்கள் தனித்தனியாகவும் பயிற்சி யளிக்கப் பெற்றால், அக்கையினைக் கூரிய கை என்றும், கத்திக் கை என்றும் அழைப்பர். இதனை, வடமொழியில், கேரள நாட்டினர் 'நிராயுத கட்கம்' என்றும், சப்பானியர் தே-கடானே (Te-Gatane) என்றும் அழைப்பர். இவ்விரண்டு கைத் தன்மைகளும் பயிற்சியளிக்கப் பெற்ற வலிமையுற்ற கையி னது பொதுத் தன்மைகளையே குறிக்கும். எனவே, 'கூன்கை' என்ற சொல்லிற்கு, வளைந்த கை என்ற பொருளே பின்னிரண் டிலும் பொருத்தமானதாகத் தெரிகிறது.

இந்த வளைந்த கைநிலை (bent arm form) பலவகைப்படும். இவைகளில் கதுப்பின்மீது தாக்கப்படும் வகைகளை மட்டும் இங்குக் காண்போம்.

அ) விரல்கள் மடியாது வளைக்கப் பெற்ற கைநிலைகள். (bent — open — hand — form)

1) விரல்கள் யாவும் ஒன்றாக நீட்டி வைக்கப் பெற்ற மணிக்கட்டினைக் கட்டை விரல் பக்கமாக வளைக் கப் பெற்றக் கைநிலை. இதில் பருமனடைந்த

நிலையிலுள்ள மணிக்கட்டுப் பகுதியானது தாக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

2) கைவிரல்கள் ஐந்தினையும் கீழ் நோக்கி வளைத்து, மணிக் கட்டினையும் வளைத்து, விரல் நுனிகளை ஒன்று சேர்த்து, ஒரு தாமரை மொட்டினைப் போன்று அமைத்த நிலை. இதில் வளைக்கப் பெற்ற மணிக்கட்டின் பகுதி தாக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

ஆ) விரல் மடிந்து வளைக்கப் பெற்ற கைநிலைகள்: (Closed fist forms)

1) விரல்கள் யாவும் மடிக்கப்பட்ட கைநிலை (closed fist) யில், முன் கையினையும் (lower arm), பின் கையினையும் இடைவெளியின்றி ஒன்றாக மடிக்கப் பெற்ற கை. இதில் இரண்டு கைகளிலும் சேர்க்கின்ற இடைப் பகுதியான கை நடுப்பகுதி (elbow) தாக்குதலுக்குப் பயன் படுத்தப்படுகின்றது.

2) இறுக்கக் கை (closed fist) நிலை மாறாத முன் கை (lower arm) யினையும், பின் கை (upper arm) இடைவெளிவிட்டு மடிக்கப் பெற்ற நிலை. இம்முறைபில், உள்ளங்கை நிலத்தைப் பார்த்த நிலை, உள்ளங்கை வானைப் பார்த்த நிலை, உள்ளங்கை தன்னைப் பார்த்த நிலை என மூன்று நிலைகள் உள்ளன. இவற்றில், உள்ளங்கை தரையைப் பார்த்த நிலையே கதுப்பினைத் தாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இதுகாறும் கூறப்பெற்ற வளைந்த கை நிலைகளில் (Forms of bent arm) பின் வருபவையே கதுப்பினைத் தாக்கி, உடைக்கப் பயன்படுகின்றன. அவை: விரல்கள் மடியாது வளைந்த கை முறைகளைச் சார்ந்த இரு நிலைகள் (அ 1 & 2), விரல் மடிக்கப் பெற்று வளைக்கப்பெற்ற இறுக்கக் கை நிலைகளில் கை நடுப்பகுதி (ஆ. 1), உள்ளங்கை நிலத்தைப் பார்த்த நிலை 'ஆ. 2).

தாக்குதலின் விளைவு:

இவ்வகையான வளைந்த கை நிலைகளால் முறையான தாக்குதல்கள் கதுப்பின் மீது இரண்டு இடங்களில் ஏற்படுத்தப் படு

கின்றன. ஒன்று, கதுப்பில் காணப்படும் 'தாடை அச்சு' (Jaw hings) மற்றொன்று, கதுப்பின் பகுதி முழுவதும். முதலாவது இடத்தில் ஏற்படும் தாக்குதலினால், தாடைகள் இடப்பெயர்ச்சி யடையும் dislocation of the jaws), இரண்டாவது இடத்தின் மீது தாக்குதல் ஏற்படுத்தப்படின், கதுப்பு உடையும். இதனால் வலி மிகுதியாக ஏற்படும். இந்த வகையான தாக்குதலானது முகத்தின் ஒரு பகுதியில் ஏற்படுத்தப் படுவதாகலான், வெறுங் கை அடிமுறையில் (Svstem of Empty Hand Techniques) கதுப்பின் மீது ஏற்படுத்தப்படும் அடியானது மிகவும் பழக்கத்தி லிருந்த ஒன்றாக இருந்திருக்க வேண்டும்.

எனவே, இதுகாறும் நாம் கண்டவற்றிலிருந்து, இவ்வாறான பல்வேறு வளைந்த கை முறைகளில் செயல் முறைகளை (applications) அனைத்தையுமோ அல்லது ஏதேனும் ஒன்றினையோ மனதில் எண்ணிக் 'கொடிறுடைக்கும் கூன்கை' என்ற சொற்றொடரை வள்ளுவர் பயன்படுத்தி இருக்கலாம் என்று ஒருவாறு உய்த்துணரலாம்.

குறிப்புகள்:

1 ''The Shaolin monks were peaceful men who wanted only to be left alone, but to survive they had to learn to protect themselves. Bodhidharma,. who journeyed from his native India to China in the sixth century, developed a sistem of weaponless fighting that the world today, known as the martialarts.''

—Carol Steves, ''Animal Forms from the Shaolin Temple to the 80s'', Black Belt (U.S A) April, 1981, Vol. 19, No. 4, p: 43.

2 திருக்குறள் உரைக்கொத்து — பொருட்பால் (ஸ்ரீ காசி மடம், 1960) பக், 784,

3 மே. நூ., பக். 784.

4 மே. நூ., பக். 784.

5 மே. நூ., பக். 784.

6 மே. நூ., பக். 785.

7 டாக்டர் வ. சுப. மாணிக்கம், உரைநடையில் திருக்குறள் (பேகன் பதிப்பகம், 1963), பக். 100.

8 திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், (சென்னை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1961), பக். 272.

குறிப்பு: ''தெரியார'' என்ற சொல்லே பதிப்பில் காணப்பெறுகிறது. இது 'தெறியார்' என்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

9 கி. வரதராசன், திருக்குறள் உரைவிளக்கம் (திருச்சி, திருவள்ளுவர் நிலையம், 1954), பக். 557.

10 வள்ளுவர் மொழியும் தெள்ளிய உரையும், (சென்னை, தி இலிட்டில் ஃப்ளவர் கம்பெனி, 1967), பக். 219.

11 ''அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது''
—குறள்: 1075.

''சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்''
—குறள்: 1078.

12 சிதம்பரதாணு பிள்ளை, படுவர்மத் திரட்டு (சென்னை சித்த மகுட பிரசுரம், 1970), பக். 23.

13 John Gilby, Secret Fighting Arts of the World. (London, Pan Books Ltd., pp. 101-111.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு விளக்கம்

—வை. தங்கமணி

தமிழ் மொழியில் தொல்காப்பியருக்குப்பின் இத்தாலி நாட்டில் இருந்து தமிழ்நாட்டிற்கு மதம் பரப்ப வந்த வீரமா முனிவர் எகரத்தின் மேலும், ஒகரத்தின் மேலும் இருந்த மெய்ப் புள்ளியை மாற்றி எகரத்தின் அடிப்பகுதியில் கோடும், ஒகரத்தின் அடிப்பகுதியில் சுழியும் போட்டு மாற்றம் காட்டினார். அவ ருக்குப் பின்னால் தந்தை பெரியார் தம் காலத்தில் ணா, லை, ளை, னை முதலிய எழுத்துகளைத் திருத்த வேண்டும் என்று கூறித் தாம் நடத்தி வந்த 'விடுதலைப்' பத்திரிகையில் ('ணை', 'லை'. 'ளை', 'னை') எனத் திருத்திய வரிவடிவத்தைப் புகுத்திக் காட்டிச் செயல்படுத்தியும் வந்தார் ஆனால் அது சட்டரீதியாக வில்லை. பின்னர் அ. தி. மு. க. அரசு பொறுப்பு ஏற்றதும் அவ்வெழுத்துக்களுக்குப் புத்துயிர் தரவேண்டும் எனக் கருதிப் பள்ளிகளிலும், அரசு அலுவலகங்களிலும் பயன்படுத்த வேண் டும் என ஆணை மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

தற்போது சில அறிஞர்கள் மேலும் எழுத்துக்களை வடிவமைப்ப தோடு எழுத்துக்களின் எண்ணிக்கையும் சுருக்க வேண்டும் என் றெல்லாம் எழுதுவதோடு பேசியும் வருகின்றனர்.

நன்னூலார் கூற்றுப்படி முதல் எழுத்துக்கள் முப்பது, ஆய்தம் ஒன்று, சார்புகள் முந்நூற்று அறுபத்தொன்பது ஆக நானூறு. ஒலிகள் நானூறு ஆயினும் வரிவடிவம் இருநூற்று நாற்பத்தேழு மட்டுமே. ஆங்கிலம் இருபத்தாறு வரிவடித்தை வைத்துக் கொண்டு வரும் அனைத்து ஒலிகளையும் எழுதிக் காட்ட வில்லையா? தமிழுக்கு இருநூற்று நாற்பத்தேழு வரிவடிவம் தேவைதானா? என்றெல்லாம் மூக்கின்மேல் விரல் வைத்துக் கேட்கின்றனர். இவர்கள் எல்லாம் சார்புக்குத் தரப்பட்ட வரி வடிவத்தையும் கணக்கிட்டுக் கலங்குகின்றனர். முதல் எழுத்து முப்பதுதான் என்பதை மறந்துவிட்டனர் போலும். முப்பதுக் கும் இருபத்தாறுக்கும் இடைப்பட்ட இடைவெளி அதிகம் என்று அஞ்சுகின்றனர் போலும்.

ஒவ்வொரு மொழியாளரும் இல்லாத ஒலியைத் தம் மொழியில் சேர்த்து மொழியை வளப்படுத்த வேண்டுமென்று விரும்பும் இற்றை நாளில் நம்மவர் நான்கெழுத்தின் நீளத்தினை மிக நீண்டதாகக் கருதி ஒலியையே குறைத்துவிட வேண்டும் என்கின்றனர்.

சப்பானைப் பார், உருசியாவைப் பார், அமெரிக்காவைப்பார், சீனாவைப் பார் அவர்கள் எல்லாம் மொழியைச் சுருக்கியதால் கிடுகிடுவென முன்னேறி விட்டார்கள். தமிழில் இத்தகு எழுத்துப் பெருக்கம் இன்றிச் சுருக்கம் இருக்குமானால் செவ்வாயில் இறங்கி, புதனில் குதித்து, வியாழனில் தாவி, சுக்கிரனைச் சுற்றி வந்துவிட மாட்டோமா? என்று கூறுகின்றனர். இவர்களை எல்லாம் என்னவென்று கூறுவது? இலக்கிய வளத்திற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் கணிதத்தின் சிறப்புக்கும் எழுத்துச் சுருக்கமா? காரணம். அல்ல.

பாரதியார் கூறுவதைக் கேளுங்கள்:

''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்''

என்றும்,

''பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வ திலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளி நாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்''

என்பதனையும் ஒருமுறை எண்ணிப் பாருங்கள். இதனை ஆங்கிலேயர் எண்ணிப் பார்த்தமையால் அன்றோ பிறமொழிச் செல்வங்கள் அனைத்தையும் மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் சேர்த்துக் கொண்டனர். அதனால் அஃது உலக மொழியானதும், அனைத்தையும் அதன் வாயிலாகக் கற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

சப்பானும், உருசியாவும், சீனாவும் அறிவியலிலும், தொழில் துறையிலும் முன்னேறியுள்ளனர் என்றால் பிறமொழிச் சொற்களைத் தங்கள் தங்கள் தாய்மொழி வாயி

லாகக் கற்றமையால் முன்னேறியுள்ளனர் என்பதை மறந்துவிட்டுப் பேசுகின்றனர், எழுதுகின்றனர்.

சிலர் விடாப்பிடியாக எழுத்துச் சீர்திருத்தமாவது வேண்டும் என்பதற்காக வீரமாமுனிவர் செய்துள்ள சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லையா? தந்தை பெரியார் ஏற்படுத்திய மாற்றத்தை ஆதரிக்க வில்லையா? என்றெல்லாம் எழுதுவதோடு உயிர் எழுத்துக்களையே குறியீட்டில் அமைத்துக் காட்டிச் சுருக்கம் காண்கின்றனர்.

இவர்கள் எல்லாம் ஒன்றனை எண்ணிப் பார்த்தல் வேண்டும். உயிர், மெய், சுட்டு, வல்லினம் மெல்லினம், இடையினம், சார்பு என்றெல்லாம் பெயர் கொடுத்திருத்தலையும், அவைகளின் வைப்பு முறையையும் வடிவமைப்பையும் ஒருமுறையேனும் கண்ணுறாதும் எண்ணிப் பார்க்காதும் கூறும் கூற்றேயாகும். எண்ணிப் பார்த்திருப்பின் தலையிடத்தில் காலையும், காலிடத்தில் கையையும் இணைக்க வேண்டும் என எண்ணுவார்களா?

ஒவ்வொரு மொழிக்கும் வரிவடிவம் வெவ்வேறு. ஒரு மொழி இன்னொரு மொழிபோல வடிவம் உடையது அல்ல. அவ்வாறிருக்க நமக்கென நம் முன்னோர்களால் தரப்பட்டுள்ள வடிவத்தை மாற்ற வேண்டும், குறிகள் மூலம் கற்றுக் கொள்ளலாம் என்பது வேடிக்கையானது. இவர்கள் எல்லாம் மரபு காத்தல் என்பதை மறந்துவிட்டுப் பேசுகின்றனர்.

தமிழ் மொழியில் 'ட், ப், ம், ய்' என்ற நான்கு எழுத்துக்கள் தவிர அனைத்தும் வலஞ்சுழித்தல் என்பதைத் தமிழ் மொழி வரிவடிவத்தை ஒருமுறை பார்த்தாலே புரிந்துவிடும்.

உயிரும், மெய்யும் தனித்தன்மை உடையவை. ஆகையால் அவற்றுக்குத் தனித்தனி வரிவடிவமும், மெய்யொலி முன்னும், உயிரொலி பின்னுமாக ஒலித்து இணைந்த கூட்டொலி உயிர் மெய்யாகையால் அதற்கு மெய்யின் வடிவமும், உயிரின் வடிவமும் இணைத்து அமைத்திருத்தலையும் சிந்திக்க வேண்டும்.

உயிர் மெய்யின் வரிவடிவத்தில் முதல் ஆறு எழுத்துக்கள் எழுத்தின் வலது பக்கத்தில் மாற்றமும், அடுத்து மூன்று எழுத்துக்கள் இடது பக்கத்தில் மாற்றமும், இறுதி மூன்று எழுத்துக்களும்

மெய்யின் இடது பக்கமும், வலது பக்கமும் மாற்றப்பட்டிருத்தலையும் சிந்திக்க வேண்டும்.

இவ்வாறு சிந்திக்காது, மரபுநிலை மறந்து நின்றமையால்தான் முத்தமிழில் இன்று இசைத் தமிழை விட்டுவிட்டோம்; நாடகத் தமிழை மறந்து வருகிறோம்; இயற்றமிழையோ எனின் விடலாமா? விடக்கூடாதா? என்று எண்ணும் நிலையில் இருக்கிறோம். ஒன்று இரண்டு என்கிற எண்களையும் மறந்து விட்டமையால் தமிழ் மொழியில் உள்ள எண்ணல் அலங்காரப் பாடல்கள் எண்ணில் அடங்காதன எடுப்பாரற்றுக் கிடத்தலையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லாநாட்டவரும் இழந்ததை மீட்டலிலும், இல்லாததைச் சேர்த்தலிலும் துடித்துக் கொண்டிருக்கும் இற்றை நாள் இழந்தது போகட்டும்—இல்லாதது நமக்கேன் — உள்ளது சுமையே என்ற கொள்கை உடையவர்களாக மாறிவிட்டதை நினைக்கும்போது 'மரமன்றோ மக்கள் பண்பின்றேல்' என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இருந்தாலும் நம் முன்னோர் மரபுநிலை வழுவா முறையில் திருத்தப்பட்டுள்ள எழுத்துச் சீர்திருத்தத்தையும் உள்ளடக்கி முப்பது வரிவடிவ எழுத்துக்களிலும் எட்டுக் குறியீட்டின் மூலமும் அனைத்துத் தமிழ் மொழி எழுத்துக்களையும் எழுதிக் காட்டி விடலாம். இம்முறை ஒரே சீரான வரிவடிவ அமைப்பினை உடையதாக அமைவதால் மாணவ மாணவியர்கள் கற்றிடவும், தட்டெழுத்துப் பொறிக்கும் எளிதாக அமையும் என நினைக்கிறேன்.

உயிர் பன்னிரண்டு எழுத்துக்களையும், பதினொரு எழுத்துக்களால் எழுதிவிடலாம். எவ்வாறு எனின் உயிரின் இறுதி ஔகாரத்தை ஒகரத்தையும், உயிர்மெய் எழுத்தான ளகரத்தையும் இணைத்தால் ஔகாரம் சேர்ந்து விடுவதால், உயிர் எழுத்துக்களைப் பதினொரு வரிவடிவத்தில் எழுதிவிடலாம்.

ஆய்தம் முப்பாற் புள்ளி ஆகையால் ஆய்தத்திற்கு ஒரு வடிவம்.

மெய்யோடு அகரம் புணரும்போது ஏற்படக் கூடிய உயிர்மெய் அடையாளம் பதினெட்டு. மேலே கூறிய முப்பது எழுத்துக்களே முழுமையான வடிவம் உடையவை.

மெய்ப்புள்ளி அடையாளம் ஒன்று.

மெய்யோடு ஆகாரம் புணரும்போது புணர்ந்துள்ளதைக் காட்ட 'ா' என்ற அடையாளம் ஒன்று.

எல்லா மெய்யொடும் இகரம் புணரும்போது 'ி' என்ற அடையாளமும், ஈகாரம் புணரும்போது 'ீ' என்ற அடையாளமும் இடவேண்டும்.

எல்லா மெய்களொடும் உகரமும், ஊகாரமும் புணரும்போது தான் சிறிது சிக்கல் ஏற்படுகிறது. தற்போது இருக்கும் வேறு வேறு வடிவத்தை ஒரே வடிவமைப்புக்குக் கொண்டுவர வேண்டிய திருக்கிறது. முன்பு கூறியதுபோல ஆகாரமும், இகரமும், ஈகாரமும் புணரும்போது புணர்ந்ததன் அடையாளம் வலது பக்கமே வந்துள்ளதை நினைவில் கொண்டு, உகரமும், ஊகாரமும் புணரும்போது புணர்ந்துள்ளதைக் காட்ட எழுத்தின் வலது பக்கமே எல்லா எழுத்துக்களுக்கும் அடையாளம் இடவேண்டிய திருக்கிறது. அதுமட்டுமல்ல மெய்யொடு உயிர் புணர்ந்துள்ளதைக் காட்டும் குறியும் உயிர் வடிவத்திலிருந்தே எடுக்கப்பட்டிருத்தலையும் கருத்தில் கொண்டு இந்த உகரம் புணரும்போது அதன் அடையாளமாக மெய்யின் வலதுபக்கம் ')' என்ற வளை கோடும், ஊகாரம் புணர்ந்ததன் குறியாக '))' என்ற இரண்டு வளைகோடும் இட வேண்டும்.

(ஒருவேளை கோட்டால் இரண்டினையும் நிரப்பலாம் ஆகையால் இரண்டிடம் வரும் குறியினையும் ஒன்றாகவே கொள்ளலாம்.)

எகரம் புணர்ந்ததன் அடையாளமாக 'ெ' என்ற குறி எழுத்தின் இடதுபக்கமும், ஏகாரம் புணர்ந்ததன் அடையாளமாக எழுத்தின் இடது பக்கம் 'ே' என்ற அடையாளம் இடவேண்டும்.

ஐகாரம் எல்லா மெய்யொடும் புணர்ந்ததன் அடையாளமாக 'ை' என்ற அடையாளம் எழுத்தின் இடதுபக்கம் இடவேண்டும்.

எஞ்சியுள்ள 'ஒ', 'ஓ' என்ற மூன்று உயிரும் மெய்யொடு புணர்ந்துள்ளதைக் காட்ட எழுத்தின் இடதுபக்கமும், வலது பக்கமும் எழுதுவதற்குத் தனித்தனி குறியீடு தேவையில்லை. ஏன் என்றால் ஒகரம் எல்லா மெய்யொடும் புணர்ந்துள்ளதைக் காட்ட எகரம் புணர்ந்ததைக் காட்டும் 'ெ' என்ற குறியை எழுத்தின் இடது பக்கமும் ஆகாரம் புணர்ந்துள்ளதைக் காட்டும் 'ா' என்ற அடையாளம் எழுத்தின் வலதுபக்கமும் இட்டால் ஒகரம் புணர்ந்துள்ளதைக் காட்டி விடுமாகையால் இதற்கெனத் தனிக்குறியீடு தேவையில்லை.

ஓகாரம் புணர்ந்துள்ளதைக் காட்ட ஏகாரம் புணர்ந்ததன் அடையாளமான ‘ே’ என்ற குறியை எழுத்தின் இடது பக்கமும், ஆகாரம் புணர்ந்ததன் குறியான ’ா’ என்ற அடையாளத்தை வலது பக்கமும் எழுதிவிட்டால் ஓகாரம் புணர்ந்துள்ளதைக் காட்டிவிடுமாகையால் ஓகாரம் புணர்ந்துள்ளதைக் காட்டிடத் தனிக்குறியீடு தேவையில்லை.

ஔகாரம் புணர்ந்துள்ளதைக் காட்ட எகரம் புணர்ந்துள்ள ‘ெ’ என்ற குறியை எழுத்தின் இடது பக்கமும், உயிர்மெய் ளகரத்தை எழுத்தின் வலது பக்கமும் எழுதிவிட்டால் ஔகாரம் புணர்ந்துள்ளது என்பதைக் காட்டிவிடும். ஆகையால் ஔகாரம் புணர்ந்துள்ளதைக் காட்டிடத் தனிக்குறியீடு தேவையில்லை.

ஆக: (1) ஔகாரம் நீங்கிய உயிரின் வரிவடிவம் 11, (2) ஆய்தம் 1, (3) அகரம் புணர்ந்த மெய்ப்புள்ளி நீக்கப்பட்ட உயிர்மெய் 18, (4) மெய்ப்புள்ளி 1, (5) ஆகாரம் புணர்ந்ததைக் காட்டும் ‘ா’ என்ற குறி 1, (6) இகரம் புணர்ந்ததைக் காட்டும் ‘ ி’ என்ற குறி 1, (7) ஈகாரம் புணர்ந்ததைக் காட்டும் ‘ ீ’ என்ற குறி 1, (8) உகரம் புணர்ந்ததைக் காட்டும் ‘)’ என்ற வளைகுறி ஒன்றும் ஊகாரம் புணர்ந்ததைக் காட்டும் ‘))’ என்ற இரண்டு வளை குறியையும் ஒரு வளைகுறியால் உகரத்திற்கும், ஊகாரத்திற்கும் எழுதவும், தட்டச்சில் தட்டவும் பயன்படுத்திக் காட்டி விடமுடியுமாகையால் மேற்சொன்ன இரண்டிற்கும் குறியீடு 1, (9) எகரம் புணர்ந்ததைக் காட்ட ‘ெ’ என்ற குறி 1, (10) ஏகாரம் புணர்ந்ததைக் காட்ட ‘ே’ என்ற குறி 1, (11) ஐகாரம் புணர்ந்ததைக் காட்ட ‘ை’ என்ற குறி 1.

ஆக முப்பது வரிவடிவ எழுத்தும் எட்டுக் குறியீடும் சேர்த்து முப்பத்தெட்டு எழுத்துக்களால் அனைத்து எழுத்துக்களையும் எழுதிக் காட்டி விடலாம். வரிவடிவமும் ஒரே சீராக அமைவதோடு முன்னோர் மரபு காக்கப்படுவதையுங் காணலாம்.

இங்கு தரப்பட்ட திருத்தமானது இத்தாலி நாட்டவரான வீரமாமுனிவர் செய்துள்ள திருத்தமும், தந்தைப் பெரியார் செய்துள்ள திருத்தமும் உள்ளடக்கியதாகும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

‘ரி’, ‘ரீ’ என்ற பழைய வடிவத்தையும் ஒரே வடிவமைப்பில் இருக்க வேண்டும் என்பதற்காக ‘ரி’, ‘ரீ’ என்று தந்துள்ளதையும் நினைவில் கொள்ள வேண்டும். (தொடரும்)